செ.வெ.எண்: 36 நாள்:11.08.2016

புதுக்கோட்டை மாவட்டம் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையில் முதன்மை மாவட்டமாக சிறந்து விளங்குகிறது - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் சார்பில் விற்பனை முனையக்கருவி (Point of Sales Device) மூலம் சிறப்பாக பணிபுரிந்த மாவட்டத்திற்கான நற்சான்றிதழை (PLATINUM AWARD) உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச்செயலாளர் மற்றும் ஆணையாளர் அவர்கள் வழங்கியதையொட்டி அந்த நற்சான்றிதழை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்களிடம் இன்று (11.08.2016) மாவட்ட வழங்கல் அலுவலர் அவர்கள் ஒப்படைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கூறியதாவது:

தமிழகத்தில் தற்போது நடைமுறையில் உள்ள குடும்ப அட்டைகள் (ரேசன் கார்டு) கடந்த 2013ம் ஆண்டுடன் காலாவதியாகி விட்டன. அதன் பின்னர் ஒவ்வொரு ஆண்டும் உள்தாள் இணைப்பின் மூலம் பொதுமக்கள் அத்தியாவசியப் பொருட்களை வாங்கி கொள்வதற்காக குடும்ப அட்டைகள் நீட்டிப்பு செய்யப்பட்டு வந்தன. இந்நிலையில் வருகிற டிசம்பர் 2016 உடன் ஏற்கனவே இணைக்கப்பட்ட உள்தாள் முடிவடைய இருப்பதால் இனி குடும்ப அட்டைகள் உள்தாள் இணைப்பின் மூலம் நீட்டிப்பு செய்யப்பட மாட்டாது. 2017ம் ஆண்டு தமிழகத்திலுள்ள அனைத்து குடும்ப அட்டைகளும் புதுப்பிக்கப்பட்டு அவை ஸ்மார்ட் ரேஷன் கார்டுகளாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த அறிவிப்பை தொடர்ந்து ஸ்மார்ட் ரேஷன் கார்டு வழங்குவதற்காக பூர்வாங்க பணிகள் சில மாவட்டங்களில் ஏற்கனவே தொடங்கி விட்டன. இந்நிலையில் புதுக்கோட்டை மாவட்டத்திலும் தற்பொழுது இந்த பணிகள் தொடங்கி உள்ளன. மாவட்டத்தில் உள்ள மொத்த குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 4,33,230.

மாவட்டம் முழுவதிலுமுள்ள 1002 நியாய விலைக்கடைகளின் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. புதுக்கோட்டை மாவட்டத்தில் விராலிமலை, இலுப்பூர், திருமயம், ஆலங்குடி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி, அறந்தாங்கி, கறம்பக்குடி, குளத்தூர், கந்தர்வக்கோட்டை, பொன்னமராவதி மற்றும் புதுக்கோட்டை ஆகிய 12 தாலுக்காக்கள் உள்ளன. 12 தாலுகா அலுவலகங்களின் உணவு வழங்கல் பிரிவு வட்டாட்சியர்கள் இவற்றை நிர்வகித்து வருகிறார்கள்.

ஒவ்வொரு தாலுகா அலுவலக கட்டுப்பாட்டிலும் உள்ள நியாயவிலைக்கடைகளின் விற்பனையாளர்களுக்கு பி.ஓ.எஸ் (பாயிண்ட் ஆப் சேல்) என்ற கருவி வழங்கப்பட்டுள்ளது. இந்த கருவியின் மூலம் குடும்ப அட்டைதாரர்களின் ஆதார் எண் ஸ்கேன் செய்யப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் நியாய விலைக்கடைகளுக்கு விற்பனை முனையக்கருவி (Point of Sales Device) வழங்கப்பட்டு அதன் மூலமே விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இக்கருவியின் மூலம் குடும்ப அட்டைதாரர்களின் செல்பேசி எண் பதிவு செய்தல், ஆதார் எண் பதிவு செய்தல், நியாய விலைக்கடைகளில் விற்பனை பரிவர்த்தனைகள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக கிட்டங்கியிலிருந்து நியாய விலைக்கடைகளுக்கு நுகர்வு செய்யப்படும் பொருட்களுக்கு ஒப்புகைச்சீட்டு வழங்குதல் மற்றும் விற்பனை முனையக் கருவி இயக்க நேரம் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகிறது. அதனடிப்படையில் ஜூலை 2016 மாதத்திற்கு புதுக்கோட்டை மாவட்டம் விற்பனை முனையக்கருவியில் சிறப்பாக பணிபுரிந்தமைக்கான நற்சான்றிதழை (PLATINUM AWARD) சென்னை உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச்செயலாளர் மற்றும் ஆணையாளர் அவர்கள் 08.08.2016 அன்று வழங்கினார் என்றும் மேலும் புதுக்கோட்டை மாவட்டம் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையில் முதன்மை மாவட்டமாக சிறந்து விளங்குகிறது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.சாந்தி, மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி.பஞ்சவர்ணம், விற்பனை முனையக்கருவி

ஒருங்கிணைப்பாளர் திரு.யோகேஸ்வரன், மாவட்ட வழங்கல் அலுவலரின் நேர்முக உதவியாளர் திருமதி.ரேணுகாதேவி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.